சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் - மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரின் அதிகார வரம்பின் எல்லைகளை நிர்வாக நலனுக்காக சில நகராட்சிகளை மண்டலங்களுக்குள் மாற்றம் செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப.1)துறை**

**அரசாணை (நிலை)எண்:30** **நாள்: 7.3.2000.**

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.73797/99/எல்.3, நாள். 10.10.1999.

-------

**ஆணை:-**

நகராட்சி நிர்வாக ஆணையர் தனது கடிதத்தில் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரின் அதிகார வரம்பின் எல்லைகள் சமமற்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பதால் நிர்வாகம் பலவீனமுள்ளதாகி விடுகிறது எனவும், நிர்வாக வசதிக்காக சில நகராட்சிகளை மண்டலங்களுக்குள் மாற்றியமைக்கலாம் எனவும் அரசுக்குத் தெரிவித்து, மண்டல நகராட்சி நிர்வாகம் சீரியமுறையில் இயங்கிட மண்டலங்களுக்கிடையே கீழ்க்கண்ட மாற்றங்களைச் செய்யலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்:-

அ) கரூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளை சேலம் மண்டலத்திற்கு மாற்றம் செய்யலாம்.

ஆ) திருப்பூர் மண்டலத்தின் கீழ் உள்ள திண்டுக்கல் மாவட்டத்தின் நகராட்சிகளை மதுரை மண்டலத்திற்கு மாற்றம் செய்யலாம்.

இ) மதுரை மண்டல நிர்வாகத்தின் கீழ் உள்ள விருதுநகர் மாவட்ட நகராட்சிகளை திருநெல்வேலி மண்டலத்தின் கீழ் மாற்றம் செய்யலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. நிர்வாகம் சீரிய முறையில் இயங்கிடும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை ஏற்று, நகராட்சி நிர்வாக மண்டலத்தில் கீழ்க்கண்ட மாற்றங்களைச் செய்து ஆணையிடுகிறது:-

அ) கரூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் சேலம் மண்டலத்திற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

ஆ) திருப்பூர் மண்டலத்தின் கீழ் உள்ள திண்டுக்கல் மாவட்டத்தின் நகராட்சிகள் மதுரை மண்டல நிர்வாகத்தின் கீழ் மாற்றம் செய்யப்படுகிறது.

இ) மதுரை மண்டல நிர்வாகத்தின் கீழ் உள்ள விருதுநகர் மாவட்ட நகராட்சிகள் திருநெல்வேலி மண்டலத்திற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

3. மேற்கண்ட ஆணை வெளியிட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
மாவட்ட ஆட்சியர், சேலம், கரூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
கருவூல அதிகாரி, சேலம், கரூர், கோவை, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி.
நகல்:அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், கோயம்புத்தூர்-11.
அனைத்துப் பிரிவுகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.